பக்கங்கள்:-21

காலை முரசு

## ‘பட்ஜட்’ நேற்று நிறைவேற்றம்!

### கஜேந்திரகுமார் மட்டும் எதிர்ப்பு



2026ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (வரவு – செலவுத் திட்டம்) 06

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | கார்த்திகை 21 | சனிக்கிழமை | 06.12.2025 | அதிர்வு 128

# பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களைக் கைவிடோம்!

## நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி உறுதி

+ வீடுகளை முழுமையாக இழந்தவர்களுக்கு 50 இலட்சம் ரூபா
+ உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு 10 இலட்சம் ரூபா

“சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்குரிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. வெள்ளம், மண்சரிவால் வீடுகளை முழுமையாக இழந்தவர்கள், புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு 50 இலட்சம் ரூபா வழங்கப்படும். அனர்த்தங்களில் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு 10 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படும்.”

- இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். 07



# இயற்கையின் கோரத் தாண்டவம்: பலி எண்ணிக்கை 607 ஆக உயர்வு



இலங்கையில் சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 607 ஆக அதிகரித்துள்ளது என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று மாலை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 214 பேர் காணாமல்போயுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

4 ஆயிரத்து 164 வீடுகள் முழுமையாகவும், 67 ஆயிரத்து 505 வீடுகள் பகுதியளவும் சேதம் அடைந்துள்ளன என்றும் மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சீரற்ற காலநிலையால் 5 இலட்சத்து 86 ஆயிரத்து குடும்பங்களைச் சேர்ந்த 20 இலட்சத்து 82 ஆயிரத்து 195 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 07




ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற சங்குச் சின்னக் கட்சியும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்ற சைக்கிள் சின்னக் கட்சியும் கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் அவை போட்டியிட்ட எல்லா சபைகளிலும் ஒன்றை ஒன்று எதிர்த்து நின்றவை.

தேர்தல் முடிந்த பின்னர், சபை நிர்வாகங்கள் அமைக்கப்படுவதற்கு இடையில், சபைகளில் பதவிகளைக் கைப்பற்றுவதற்காக சைக்கிள் கூட்டணியும் சங்கு கூட்டணியும் தமக்குள் உடன்பாடு கண்டன.

இது பதவிக்கான கூட்டணி என்று அப்போதே சொல்லப்பட்ட போது, ‘இல்லை, இல்லை, இது கொள்கைக் கூட்டு’ என்று பிரகடனப்படுத்தினார் சைக்கிள் கட்சியில் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி.

சபைகளின் நிர்வாகிகள் தெரிவு முடிந்ததும் அதுவரையில் ‘கொள்கைக் கூட்டு’ என்று கூறப்பட்டது உண்மையில் ‘கொள்கையே இல்லாக் கூட்டு’ – ‘கொள்ளை போகின்ற கூட்டு’ என்பது 06



# கொத்மலைப் பகுதிகளுக்கு படகு மூலம் சென்று நுவரெலியா மாவட்டச் செயலாளர் நேரில் ஆய்வு

**(மஸ்கெலியா விசேட நிருபர்)**

கொத்மலை பேரிடர் தள ஆய்வு மற்றும் நிவாரணப் பணிகளில் நுவரெலியா மாவட்டச் செயலாளர் துஷாரி தென்னகோன் நேரடியாக ஈடுபட்டார்.

கொத்மலையில் ஏற்பட்ட பேரிடர் காரணமாக சாலை வழியான போக்குவரத்து இன்னும் தடைப்பட்டுள்ளது. எனினும், கொத்மலை நீர்த்தேக்க வழியாக படகு மூலம் நேற்று கொத்மலைப் பகுதிகளுக்கு நேரில் சென்று அங்குள்ள நிவாரணப் பணிகளை அவர் ஆய்வு செய்தார்.

கொத்மலை பிரதேச செயலகத்தில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளை சந்தித்து நிவாரணப் பணிகள் குறித்து அவர் விவாதித்தார்.

நியாங்கந்தோர மற்றும் அம்பதலாவ கோயில்களுக்கும் பௌத்த விகாரைக்கும் சென்ற மாவட்டச் செயலாளர், அங்கு வசிக்கும் துறவிகளைச் சந்தித்து நிவாரணம் வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து குறிப்பிட்டார்.

அனர்த்தத்தால் பெரும் சேதத்தை சந்தித்த ரம்பொடை , ரம்பொடை கிராமத்தில் நிலச்சரிவு ஏற்பட்ட இடங்களை ஆய்வு செய்வதிலும் மாவட்ட செயலாளர் ஈடுபட்டார். மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சர்மிலா ரணசிங்க, கொத்மலை பிரதேச செயலாளர் நதீரா லக்மால், உதவி தேர்தல் ஆணையாளர் லஹிரு கலுகம்பிட்டிய மற்றும் பலர் இந்நடவடிக்கைகளில் கலந்துகொண்டனர்.



















# பேரிடரால் உயிரிழந்தவர்களுக்கு வவுனியாவில் அஞ்சலி!

**(கி.வசந்தன்)**

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடரால் உயிரிழந்த பொதுமக்களுக்கு வவுனியா பூந்தோட்டம் பகுதியில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

பூந்தோட்டம் வர்த்தகர் சங்கம், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு, அற்புதமான இதயம் அமைப்பு ஆகியவற்றால் இந்த நிகழ்வு ஏற்ப்பாடு செய்யப் பட்டிருந்தது.

நிகழ்வில் உயிரிழந்தவர்களின் நினைவாக அகவணக்கம் செலுத்தப்பட்டு மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக நிவாரண பொருள்களும் சேர்க்கப்பட்டன.













# ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற நடமாடும் சேவை

(பா.சதீசன்)

உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, Clean Sri Lanka செயலகம் மற்றும் மாவட்ட செயலகம் முல்லைத்தீவு என்பன "க்ளீன் சிறிலங்கா – ஒருங்கிணைந்த மற்றும் நிலைத்த நாடு" என்ற தேசிய திட்டத்திற்கு அமைவாக நடமாடும் சேவைகள் மற்றும் விசேட மக்கள் நலன்புரி வேலைத்திட்டம் நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்டம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் நிசாந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவையினை வடக்குமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டமையுடன் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு நிவாரணமும் வழங்கி வைத்தனர்.

இந்த நடமாடும் சேவையில் பல்வேறு சேவைகள், பணிகள் மக்களுக்கு ஒரே நாளில் முன்னெடுக்கப்பட்டன.

அரச சேவைகளுக்கு பொதுமக்கள் எளிதில் அணுகும் வசதி ஏற்படுத்துதல், சுற்றுச்சூழல் பொறுப்புணர்வை வளர்த்தல்,? மக்கள் நேய வினைத்திர்வாக அமைப்பை வலுப்படுத்தல் ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கங் களாக அமைந்தன.

இந்த நடவடிக்கைத் திட்டம் மூலம் பொதுமக்களுக்கு விரைவான சேவை வழங்கும் அமைப்பை உருவாக்குதல், சமூக மட்டப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், சுற்றுச்சூழல் சுத்தம் மற்றும் தரமான நிர்வாகத்தை மேம்படுத்துதல் எனும் நோக்கங்களை அடைவதற்குத் திட்டமிடப்பட்டது.

அங்கு பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த சேவைகளின் துறைகள் வருமாறு:-

- பிறப்பு, இறப்பு மற்றும் உத்தேச வயது சான்றிதழ்கள்.
- ஆள்களைப் பதிவுசெய்யும் திணைக்களம் (தேசிய அடையாள அட்டை).
- ஓய்வூதியம்.
- மோட்டார் வாகன பதிவு மற்றும் வாகன வருமான அனுமதிப்பத்திரம்.
- வியாபார பெயர்ப் பதிவு.
- காணி.
- சமூக சேவைகள் திணைக்களம்.
- முதியோர் தேசிய செயலகம்.
- சிறுவர், பெண்கள் உரிமைகள்.
- வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவு.
- திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்கல்வி வழிகாட்டல்கள்.
- மனிதவள அபிவிருத்தி மற்றும் தொழில் வழிகாட்டல்கள்.
- கைத்தொழில் திணைக்களம்.
- கிராம அபிவிருத்திப் பிரிவு .
- சமய, கலாசாரப்பிரிவு.
- பிரதேச சபைகள்.
- கமநல சேவைகள் திணைக்களம்.
- ஆயுள்வேத திணைக்களம்.
- விவசாயத் திணைக்களம்.
- கால்நடை அபிவிருத்தித் திணைக்கள.
- மின்சார சபை.
- நீர் வழங்கல் அதிகார சபை.
- தென்னைப் பயிர்ச் செய்கை சபை.
- பொலிஸ் திணைக்களம்.

தொடர்ச்சி▼










# ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற நடமாடும் சேவை

தொடர்ச்சி▲

இவற்றுடன் முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரத்திணைக் களத்தின் விசேட மருத்துவமுகாம், பொதுமக்களிற்கான விழிப்புணர்வு நிகழ்வுகள், கலாசார நிகழ்வுகள் என்பனவும் இடம்பெற்றிருந்தன.

அதேநேரம் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. வெள்ளத்தால் நீரில் மூழ்கிய வீட்டைச் சுத்தம் செய்வதற்காக பாதிக்கப்பட்ட மக்களுக்கும் காசோலையும் வழங்கிவைக்கப்பட்டது.அதேவேளை நேற்றையதினம் துணுக்காய், புதுக்குடியி ருப்பு, கரைதுறைப்பற்று முதலான பிரதேச செயலகங்களில் இவை நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.இந்தநடமாடும் சேவையில் பெருந்திரளான மக்கள் ஆர்வத்துடன் பங்குபற்றியிருந்தார்கள்.


























## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுதியாகத் தொடங்கியது. உண்மையில் கொள்கை ரீதியான உடன்பாடோ இணக்கமோ இல்லாத காரணத்தால் உள்ளூராட்சி சபைகளிலும், வெளியிலும் பல விடயங்களிலும் இரு தரப்புகளுமே தனித்தனி வழி போகத் தலைப்பட்டன.

இப்போதுசிலமாதங்களில்இன்னொரு தடவை அது – அதாவது இந்த கூட்டு கொள்கையே இல்லாத கூட்டு என்பது – நேற்றும் உறுதியாகியிருக்கின்றது.

உள்ளூராட்சி மன்றங்களில் தமிழ் மக்களுக்காக தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர வேண்டும் என்று பேசிக் கொண்டிருந்த சைக்கிள் தரப்பு வடக்கு, கிழக்கில் மிக முக்கியமான உள்ளூராட்சி சபையான யாழ் மாநகர சபையில், தமிழ் கட்சிகளின் ஆட்சியை – நிர்வாகத்தை – வீழ்த்துகின்ற விடயத்தில் ஜே.வி.பியின் தேசிய மக்கள் சக்தியுடன் ஓரணியில் நிற்பதுதான் நடந்திருக்கின்றது.

வடக்கு – கிழக்கு உள்ளூராட்சி சபைகளில் தமிழ் கட்சிகளின் நிர்வாகத்தை வீழ்த்தக் கூடாது என்ற ஒரே கருத்தில் சங்கு கூட்டணி உட்பட மற்றைய கட்சிகள் எல்லாம் யாழ் மாநகர சபையின் ஆளும் தமிழரசுக் கட்சி நிர்வாகத்திற்கு முண்டு கொடுத்திருக்கின்றன.

சங்கு கூட்டணியுடன் தான் அமைத்தது தேர்தலுக்குப் பிந்திய நிர்வாகத்தைக் கைப்பற்றுகின்ற நோக்கம் மட்டுமே கொண்ட சந்தர்ப்பவாதக் கூட்டு என்பதை சைக்கிள் கட்சி இப்போது யாழ் மாநகர சபையில் நேற்றுத் தனது நடத்தை மூலம் நிரூபித்திருக்கின்றது.

இந்தப்போக்குகள், இனிமேல்மாகாண சபை தேர்தல் நடந்தால் சைக்கிள் கட்சியுடன் மாம்பழக் கட்சி மாத்திரம்தான் மிஞ்சும் என்ற உண்மையைத்தான் வெளிப்படுத்தி நிற்கின்றன.

* * *

நேற்று முன்தினம் கொழும்பில் இருந்தார் மனோ கணேசன் எம்.பி.

அவரின் தமிழ் முற்போக்குக் கூட்டணியில் மற்றொரு எம்.பியான பழனி திகாம்பரம் கினிகத்தனைக்குப் பக்கத்தில் உள்ள ஓர் இடத்தில் இருந்து தொலைபேசி அழைப்பு எடுத்தார். அவரது பேச்சின் ஆரம்பமே நையாண்டித்தனமாக இருந்தது.

"தமிழரசுக் கட்சி சுமந்திரன் – சாணக்கியன் ஒரு புறமாகவும், சிறிதரன், சிறிநேசன் மற்றொரு பறமாகவும் என்று பிரிந்து நிற்கின்றது. அது போல எங்கள் தமிழ் முற்போக்குக் கூட்டணியும் தலைவர் மனோ கணேசன் ஒரு புறமாகவும், பிரதித் தலைவர் பழனி திகாம்பரம் இன்னொரு புறமாகவும் நிற்கின்றார்கள் என மக்கள் பேசப் போகின்றார்கள்..." என்றார் பழனி திகாம்பரம்.

விடயம் விளங்காமல் அந்தரப்பட்டார் மனோ கணேசன்.

"இல்லை, இல்லை... நேற்று முன்தினம் நீங்கள் தமிழரசு கட்சியின் சுமந்திரனோடும் சாணக்கியனோடும் கம்பளை மற்றும் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்றீர்கள். இன்று இப்போது தமிழரசுக் கட்சியின் சிறிதரனும் சிறிநேசனும் மலையகத்தில் என்னுடன் நிற்கின்றார்கள். அது பற்றி அறிந்ததும் மக்கள் இனி அப்படித்தான் நினைப்பார்கள்" – என்று கிண்டலாக கூறினார் பழனி திகாம்பரம்.

அதை ஓர் அரசியல் சிலேடையாக கூறுகின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

"தொலைபேசியில் 'மைக்' போட்டிருக்கிறேன். இதோ சிறிதரன் என் அருகில் நிற்கிறார். அவருடன் பேசுங்கள்" – என்று தொலைபேசியை சிறிதரனிடம் கொடுத்தார் பழனி திகாம்பரம்.

பேரிடர் பாதிப்பினால் பாதிக்கப்பட்ட மலையக மக்களைப் பார்ப்பதற்காக – சந்திப்பதற்காக – நிவாரணங்கள் வழங்குவதற்காக – வடக்கு, கிழக்கில் இருந்து வந்திருக்கும் தாங்கள் மலையகத் தமிழ்த் தலைவர்களின் இணக்கத்தோடும் உதவியோடும் அதை முன்னெடுப்பதுதான் பொருத்தம் என்று கருதியே சிறிதரன், திகாம்பரத்தைச் சந்தித்தமையோடு, அவர் மூலம் இந்த அழைப்பை மனோ கணேசனுக்கும் எடுத்திருப்பார் என்று நினைக்கிறேன்.

"ஹலோ...!" என்று மனோ கனேசன் பேசத் தொடங்கியதுமே "திகாம்பரம் கூறியவை நையாண்டித் தனமானவை. தமிழ் முற்போக்குக் கூட்டணிக்குள் அத்தகைய பிளவேதும் இருப்பதாக யாரும் கருதவில்லை" என்று சிறிதரன் மென்மையாகக் குறிப்பிட்டார்.

ஆனாலும் சிறிதரன் – மனோ கணேசன் உரையாடல் சற்று நெருடலாகவே இருந்ததாக அறிந்து கொண்டேன். சிறிதரனின் பேச்சினால் அல்ல, மனோ கணேசனின் சூடான கருத்தினால்தான் அப்படியாயிற்று.

விடயம் ஒன்றும் இல்லை, சில தினங்களுக்கு முன்னர் பேரிடர் பாதிக்கப்பட்ட கம்பளைக்கு எதிர்க்கட்சி பிரமுகர்கள், எம்.பிக்களோடு மனோ கணேசன் சென்றிருந்தார். அந்த அணியில் சாணக்கியன் எம்.பியும், சுமந்திரனும் கூட இடம்பெற்றிருந்தனர்.

அதனால் என்னவோ சில சமூக ஊடகங்கள், தமிழ் முகப்புத்தகத் தரப்பினர் மனோ கணேசனை ஒரு பிடி பிடித்திருந்தனர்.

சிறிதரனின் அல்லக்கைகளாக இயங்கும் சமூக ஊடகங்களும் முகப்புத்தக கணக்குகளுமே இந்தக் கைவரிசையைக் காட்டி இருந்தன என்று மனோ கணேசனின் சமூக ஊடக ஆலோசகர்கள் அவருக்கு தெரிவித்திருப்பார்கள் போலும்.

இந்தத் தொலைபேசி அழைப்பைப் பயன்படுத்தி சிறிதரனுக்குச் சற்று சூடாக மனோ கணேசன் சில விடயங்களைத் தெளிவு படுத்தினார் எனத் தெரிய வந்தது.

"உங்களுக்கும் சுமந்திரன் – சாணக்கியன் அணிக்கும் இருக்கும் பிரச்சினை உங்கள் உள்கட்சி விடயம். அதில் நாங்கள் சம்பந்தப்பட மாட்டோம். அதற்காக எங்களையும் தேவையில்லாமல் அதில் இழுத்து விட வேண்டாம் என்று உங்கள் பக்கத்து சமூக ஊடகங்களுக்கும் முகப் புத்தக கணக்குகளுக்கும் சரியான வழிப்படுத்தலைக் கொடுத்துக் கொள்ளுங்கள்" – என்ற சாரப்பட சற்று சூடாகவே கொடுத்திருக்கிறார் மனோ கணேசன்.

"இல்லை... இல்லை... என் ஆதரவாளர்கள் அப்படி இல்லை" என்று ஏதேதோ கூறி சிறிதரன் சமாளித்தார் என்று கேள்வி.

எல்லாவற்றையும் செவிமடுத்துக் கொண்டிருந்த பழனி திகாம்பரம் இருவரையும் சமாளித்து, சமரசம் பண்ணி, உரையாடலை சுமூகமாக முடித்து வைத்தார் என்று தெரிய வந்தது.

அரசியல் தலைவர்களுக்குப் பக்கத்தில் இருக்கும் அல்லக்கைகளால்தான் எப்போதுமே தொல்லை.

சாணக்கியன் – சுமந்திரன் அணியை சிறிதரன் தரப்போடு மிக இலகுவாக சமரசம்செய்துவைத்துவிடலாம்என்றுநினைக்கிறேன். ஆனால் அல்லக்கைகள் அதற்கு இடமளிக்க மாட்டார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

---

## 'பட்ஜட்' நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மூன்றாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு பி.ப. 07.30 மணிக்கு ஆரம்பமானதுடன், இதற்கு ஆதரவாக 158 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் அளிக்கப்பட்டது.

அந்த ஒரு வாக்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியால் போடப்பட்டுள்ளது.

வாக்கெடுப்புக் கோரமால் இருப்பதற்கும், எவரேனும் வாக்கெடுப்பு கோரினால் வாக்கெடுப்பில் கலந்துக்கொள்ளாமல் இருப்பதற்கும் எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி தீர்மானித்திருந்த நிலையில் ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (வரவு – செலவுத் திட்டம்) வாக்கெடுப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்படும் என்று முன்னதாக எதிர்பார்க்கப்பட்டது.

அதற்கமைய, 2026 ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 157 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

2026ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு அல்லது 'வரவு – செலவுத் திட்ட உரை' நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அவர்களினால் கடந்த நவம்பர் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நவம்பர் 8ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை 6 நாட்கள் ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (வரவு – செலவுத் திட்டம்) மீதான இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் இடம்பெற்றது. அதற்கமைய, ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மீதான இரண்டாவது மதிப்பீடு நவம்பர் 14 ஆம் திகதி 118 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அதன் பின்னர் நவம்பர் 15ஆம் திகதி முதல் நேற்று வரை ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மீதான குழு நிலை விவாதம் 14 நாட்கள் இடம்பெற்றன. 2026 ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மீதான குழுநிலை விவாதம் 17 நாள்கள் இடம்பெறவிருந்ததுடன், சீரற்ற காலநிலையினால் நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலைமை காரணமாக விவாத நாட்கள் இவ்வாறு 14 நாள்களாகக் குறைக்கப்பட்டன.

அந்த நிலையில், கடந்த சில நாட்களில் குழுநிலையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்த ஒரு சில அமைச்சுக்களுக்கான செலவுத் தலைப்புகள் மீது முன்னர் திட்டமிடப்பட்ட தினங்களில் விவாதம் மேற்கொள்ள முடியாமல் போனதால், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு மேலதிகமாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு மற்றும் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு என்பவற்றின் செலவுத் தலைப்புகளும் டிசம்பர் 3ஆம் திகதியும், நேற்றும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டன.

மேலும், நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்ட 2026 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் அரசமைப்பின் 79 ஆவது உறுப்புரைக்கு அமைய கௌரவ சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார். இதற்கமைய, ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2025ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டமாக அமுலுக்கு வருகின்றது.

அதற்கு மேலதிகமாக, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்த) சட்டமூலம், பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் மற்றும் செயல் நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் (திருத்தச்) சட்டமூலம் ஆகிய மூன்று சட்டமூலங்கள் நேற்று நாடாளுமன்றத்தில் விவாதம் இன்றி நிறைவேற்றப்பட்டன.

அத்துடன், பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம் மற்றும் அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம் என்பவற்றுக்கும் பாராளுமன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக, மூன்று குறைநிரப்புத் தொகைகளும் நாடாளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்டன.

# பேரிடரால் தற்காலிகமாக மூடப்பட்டிருந்த தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை மீள திறப்பு

அனர்த்த நிலைமையால் தற்காலிகமாக மூடப்பட்டிருந்த தெஹிவளை மற்றும் பின்னவல மிருகக்காட்சிச்சாலைகள் மீள திறக்கப்பட்டுள்ளன.

மரங்கள் முறிந்து வீழ்ந்தமையால் மிருகக்காட்சிச்சாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டன என தேசிய மிருகக்காட்சிச்சாலை திணைக்களம் தெரிவித்தது.

இந்நிலையில், சீரமைப்பு பணிகள் நிறைவடைந்த நிலையில் மிருகக்காட்சிச்சாலைகளை மீள திறக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் கூறியுள்ளது.

# வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர்கள் மூலம் நிதியுதவி



'Rebuilding Sri Lanka' நிதியத்திற்கு வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் மூலம் சுமார் 635 மில்லியன் ரூபா நிதியுதவி கிடைத்துள்ளதாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஹர்ஷண சூரியப்பெரும தெரிவித்துள்ளார்.

இலங்கை வங்கியின் கணக்கின் ஊடாக 30,470 இற்கும் மேற்பட்ட வைப்புகள் பதிவாகியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயங்களில் வைப்பிலிடுவதற்கான கணக்கினூடாக இதுவரை 61 மில்லியன் ரூபா நன்கொடையாக கிடைத்துள்ளதாகவும் இந்த கணக்கிற்கு 33 நாடுகளிலுள்ள இலங்கையர்களினால் நிதி வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

'Rebuilding Sri Lanka' நிதியத்திற்கு இதுவரை 700 மில்லியன் ரூபா, நன்கொடையாக கிடைத்துள்ளதாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி, ஹர்ஷண சூரியப்பெரும தெரிவித்துள்ளார்.

## பேரிடரால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் ஜனாதிபதி மேலும் கூறியவை வருமாறு:-

"எம்முடன் தற்போது வாழவேண்டியவர்களை நாம் இழந்து தவிக்கின்றோம். சில பகுதிகளில் கிராமங்களே மூழ்கியுள்ளன.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. சிலர் உயிரிழந்திருந்தாலும் இன்னும் சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை.

காணாமல்போயுள்ளவர்களை உறவுகள் தேடுகின்றனர். நாம் கவலை அடைகின்றோம்.

இறந்தவர்களை எம்மால் மீள வழங்க முடியாது. ஆனால் அவர்களின் உறவுகளுக்கு சிறந்ததொரு நாட்டை கையளிக்க முடியும். அதற்குரிய கடப்பாடு எமக்கு இருக்கின்றது.

அனர்த்தங்கள் உயிர்களை, உடமைகளை பறித்தாலும் எமது மக்கள் மத்தியில் உள்ள மனிநேயத்தை பறிக்க முடியாது என்பது மீண்டும் உறுதியானது.

மக்கள் தம்மால் முடிந்த உதவிகளை வழங்கிவருகின்றனர். வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களும் எல்லா வழிகளிலும் உதவி வருகின்றனர். இலங்கையர்களாக இது பெருமையளிக்கின்றது.

மக்களுக்கான சிறப்பான சேவையை வழங்கிய முப்படையினர், பொலிஸார், அரசாங்க அதிகாரிகள், சுகாதார அதிகாரிகள் உள்ளிட்டவர்களுக்கு நன்றிகள்.

படையினர் உயிர் தியாகம்கூட செய்துள்ளனர். இவர்கள் நிச்சயம் வரலாற்றில் இடம் பிடிப்பார்கள்.

நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து இலங்கையை மீட்பதற்காக உதவி செய்த வெளிநாடுகளுக்கு நன்றிகள்.

நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலைமையை எதிர்கொள்வதற்காகவே அவசர காலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசமைப்பை மீறி நாம் செயற்படவில்லை. மக்களின் உரிமையை மீறும் வகையில் நாம் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தமாட்டோம்.

எம்மை விமர்சிப்பவர்களுக்கு எதிராக நாம் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்த மாட்டோம். மக்களுக்காகவே அதனைப் பயன்படுத்துவோம்.

கம்பளையில் ஆயிரம் பேர் உயிரிழந்து விட்டனர் என எம்.பி. ஒருவர் கூறினார். நாடாளுமன்றச் சிறப்புரிமைக்குள் ஒளிந்துகொண்டே இதனை அவர் சொன்னார்.

வெளியில் வைத்து இந்தக் கருத்தை அவர் வெளியிட்டிருந்தால் நிச்சயம் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும். எதிரணியில் இருந்தாலும் சிலர் பொறுப்புடன் செயற்பட்டனர்.

மேலும் சில எதிரணி அரசியல்வாதிகள் அனர்த்தத்திலும் அரசியல் செய்தனர்.

புதிய வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்படமாட்டாது. நாட்டை மீட்பதற்குரிய எமது திட்டத்தின் ஓரங்கம்தான் வரவு - செலவுத் திட்டமாகும்.

எனவே, ஒதுக்கீடுகளை உரிய வகையில் பயன்படுத்தலாம். ஒதுக்கீட்டில் அனர்த்த நிலைமை மீட்புக்கு முன்னுரிமை அளிக்கப்படலாம்.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்கு உதவிகள் வழங்கப்படும்.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளைச் சுத்தம் செய்வதற்கு 25 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

மீள்குடியேற்றத்துக்குரிய அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு 50 ஆயிரம் ரூபா (வீட்டு உரித்து கருத்தில் கொள்ளப்படமாட்டாது) வழங்கப்படும்.

முற்றாகச் சேதமடைந்துள்ள – மீள்குடியேற முடியாத நிலையில் உள்ள வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு 50 இலட்சம் ரூபா வழங்கப்படும். (வெள்ளம், மண்சரிவு இரண்டுக்கும் இது பொருந்தும்)

அபாய வலயங்களுக்கு மீண்டும் செல்வதற்கு இடமளிக்கமாட்டோம். அரச காணி வழங்கப்படும். அரச காணி இல்லாவிட்டால் காணி வாங்குவதற்கு 50 இலட்சம் ரூபா வரை கொடுப்பனவு வழங்கப்படும்.

பகுதியளவு சேதமடைந்துள்ள வீடுகளைப் புனரமைப்பதற்கு அதிகபட்சமாக 25 இலட்சம் ரூபா வரை வழங்கப்படும். (நான்கு கட்டங்களாக இதற்குரிய மதிப்பீடு இடம்பெறும்.)

வீடுகளையும் வாழ்வாதாரத்தையும் இழந்த குடும்பங்களுக்கு, ஒரு மாதத்துக்குரிய கொடுப்பனவாக, 2 உறுப்பினர்களைக்கொண்டகுடும்பங்களுக்கு25ஆயிரம் ரூபா வரையிலும், இரண்டுக்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 50 ஆயிரம் வரையிலும், மூன்று மாதங்களுக்கு வழங்கப்படும்.

அனர்த்தங்களில் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு 10 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படும்." – என்றார்.

மேற்படி திட்டங்களுக்காக இடைக்கால கணக்கறிக்கை முன்வைக்கப்படும்.

இதனை நிறைவேற்றிக்கொள்வதற்காக நாடாளுமன்றம் எதிர்வரும் 19 ஆம் திகதி கூடும்.

கொடுப்பனவு தொடர்பான நடைமுறைகள் அடங்கிய சுற்றறிக்கையும் வெளியிடப்படவுள்ளது.

## இயற்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர்களில் 43 ஆயிரத்து 715 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 52 ஆயிரத்து 537 பேர் தற்போது இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## காரணங்கள் நிறையவே உள்ளன

அரைகுறையாகப் பேசி மக்களைக் குழப்புவதில் அரசியல்வாதிகளை விஞ்சுபவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது.

தானும் அந்த அரசியல்வாதிகளின் பட்டியலில் வேறுபட்டவர் அல்லர் என்பதை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும் நிருபிக்க முயன்றிருக்கின்றார்.

எந்த அரசு ஆட்சியில் இருந்தாலும் அனர்த்தம் நேருவதைத் தடுக்கவே முடியாது என்று அவர் கூற முயல்கின்ற விளக்கம் - வியாக்கியானம் - அத்தகைய குழப்பத்தைத்தான் தந்து நிற்கின்றது.

இயற்கை அனத்தங்கள், பேரிடர்கள் நேருவதை எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் தடுக்க முடியாது - வராமல் செய்வது சாத்தியமல்ல - என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்தான்.

ஆனால் உரிய முன்னெச்சரிக்கைகள், காப்பு நடவடிக்கைகளை நேரத்துடன் முன்னெடுத்திருந்தால் அத்தகைய பேரிடர் பாதிப்புகளைத் தவிர்க்கலாம் அல்லது குறைத்திருக்கலாம். அது மாத்திரமல்ல பேரிடர் நடந்த - நடக்கின்ற - சமயங்களில் துரிதமாகச் செயல்படுவதன் மூலம் அதனால் ஏற்படும் பாதிப்புகளையும் இழப்புக்களையும் தவிர்ப்பதற்கும் வாய்ப்பு உண்டு.

இந்தத் தடவை பேரிடர் நேருகின்ற போது அது தொடர்பில் ஓர் அரசாங்கமாக முன்னெடுத்திருக்க வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு உரிய காலத்தில் எடுத்திருந்ததா, அது நிகழ்ந்த சமயங்களில் அது தொடர்பில் எத்தகைய பிரதிபலிப்பு நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்தது என்பவை எல்லாம்தான் இப்போது பிரச்சினைக்குரிய விடயங்களாக மாறி இருக்கின்றன.

அது பற்றியே மக்கள் பேசுகிறார்கள். பல தரப்புகளும் விமர்சிக்கின்றன. எதிரணி வழக்குப் போட முயல்வதும் அது தொடர்பில்தான்.

அந்த உண்மை நிலைமையைப் புரிந்து கொள்ளாதவர் மாதிரி, எந்த அரசு ஆட்சியில் இருந்தாலும் அனர்த்தத்தைத் தடுக்க முடியாது என்று விதண்டாவாதம் பேசுகிறார் அரசியலில் தலைநிமிர முடியாமல் தடுமாறிப் போய் நிற்கும் ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

அண்மைக் காலமாக தேசிய மக்கள் சக்திக்கு சார்பான கருத்துக்களை காரண காரியம் இன்றி வெளியிட்டு வரும் அவர், அதன் மூலம் இந்த அரசுக்குள் நுழைந்து அரசியல் பதவி ஒன்றை எட்டி விட முடியாதா என்ற நப்பாசையில் இருப்பவர் போல் தோன்றுகின்றார்.

இந்தப் பேரிடர் இழப்புகள் தொடர்பில் - அதை எதிர்கொள்வதற்கான ஆயத்தங்கள் தொடர்பில் - தற்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ள, ஐக்கிய நாடுகளின் ஆசிய, பசுபிக் பிராந்திய வளர்ச்சித்திட்டத் தலைவர் கனி விக்னராஜா தெரிவித்திருக்கும் கருத்துக்கள் இப்போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியனவாக இருக்கின்றன. "போதுமான தயார் நிலையில் இல்லாதமை, பேரழிவில் தீவிர பங்குவகித்துள்ளது" - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதே விடயத்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் கூறியிருக்கின்றார்.

வானிலை அதிகாரிகள் 15 நாள்களாக முன்அறிவிப்புச் செய்து கொண்டிருந்த வேளை, தூங்கிக் கொண்டிருந்த அரசாங்கம், இப்போது வானிலை அதிகாரிகள் மீது குற்றம் சாட்டி வருகிறது என அவர் விசனம் தெரிவித்திருக்கின்றார். இவ்வளவு எச்சரிக்கைகள் தந்தும் இடர் முகாமைத்தைவ நிலையத்தின் நடவடிக்கைகளின் செயலற்ற தன்மைக்கான காரணங்கள் யாது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இவ்விவகாரத்தில் நீதிமன்றத்தை நாடி நியாயம் கேட்பதற்கான வழக்கெழு காரணம் பலமாக உள்ளது என்பது மறுக்க - மறைக்க - மறக்க - முடியாத உண்மையாக இருக்கின்றது என்றே தோன்றுகின்றது .

# திருமலை மாவட்டத்தில் இறைச்சிக்காகக் கால்நடைகளை வெட்டவும் இறைச்சியை விற்கவும் 5 நாள்களுக்குத் தடை!

**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை மாவட்டத்தில் இறைச்சிக்காக மாடு,எருமை,ஆடு, செம்மறியாடு மற்றும் பன்றி ஆகியவற்றை அறுப்பதையும் அவற்றை விற்பனை செய்வதையும் தற்காலிகமாக இன்று முதல் 5 தினங்களுக்கு இடைநிறுத்த வேண்டும் என கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் எம்.ஏ.எம். சுல்பிகார் அபூபக்கர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் பணிப்பாளரால் விடுக்கப்பட்ட அறிவித்தலில் பின்வருமாறு அவர் கூறியுள்ளார்:-

“1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க விலங்கு நோய்கள் சட்டம் மற்றும் 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விலங்குகள் சட்டம் ஆகியவற்றின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் என்ற வகையில் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம்,உங்கள் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மாடு,எருமை,ஆடு, செம்மறியாடு மற்றும் பன்றிகளை இறைச்சிக்காக வெட்டுவதையும், அத்துடன் அனைத்து இறைச்சி வெட்டும் கொல் களங்களையும் மற்றும் இறைச்சிக் கடைகளின் செயற்பாடுகளையும் உடனடியாக இடைநிறுத்துமாறு இத்தால் பணிப்புரை விடுக்கின்றேன்.”

“இப்பணிப்புரையானது,முன்னதாக இரத்துச் செய்யப்பட்டாலோ அல்லது மேலும் நீடிக்கப்பட்டாலோ தவிர. 06.12.2025 தொடக்கம் ஐந்து நாள்களுக்குச் செல்லுபடியாகும்”.

“திருகோணமலை மாவட்டச் செயலாளரின் கோரிக்கைக்கு அமைவாகவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் அடிப்படையிலும், நல்லெண்ணத்துடனும் பின்வரும் அவசரக் காரணங்களுக்காக இப்பணிப்புரை விடுக்கப்படுகின்றது”.

“சந்தேகத்திற்கிடமான நோய் தாக்கம்: 1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க விலங்கு நோய்கள் சட்டம் மற்றும் 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விலங்குகள் சட்டம் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிமுறைகளின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கால்நடைகளில் தற்போது தொற்று நோய்களின் தாக்கம் இருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது”.

“திருட்டு மற்றும் சட்டவிரோதக் கடத்தலைத் தடுத்தல் (அனர்த்தத்திற்குப் பின்னரான சூழல்)திருகோணமலை மாவட்டத்தில் ஏற்பட்ட “டித்வா“ சூறாவளி மற்றும் அதனோடு தொடர்புடைய வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து கால்நடைகள் திருடப்படுவதற்கான நம்பகமான அச்சுறுத்தல் காணப்படுகிறது. விலங்குகள் சட்டம் மற்றும் விலங்கு நோய்கள் சட்டத்திற்கு முரணாக இந்த விலங்குகள் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்படும் அபாயம் அதிகமாக உள்ளது”.

“1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விலங்குகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவு மற்றும் தொடர்புடைய விதிமுறைகளுக்கு முரணாக மாவட்டத்தில் சட்டவிரோதமான முறையில் இறைச்சிக்காக கால்நடைகளை அறுக்கும் சம்பவங்கள் இடம்பெறுவது அறிக்கையிடப்பட்டுள்ளது”.

“விவசாயிகளின் சொத்துக்களைத் (கால்நடைகளை) திருட்டிலிருந்து பாதுகாப்பது, விலங்கு வழித் தொற்று நோய்கள் உட்பட ஏனைய தொற்று நோய்கள் பரவுவதைத் தடுப்பது, மற்றும் மனித நுகர்வுக்காக வழங்கப்படும் இறைச்சி பாதுகாப்பானதாகவும் சுகாதாரமானதாகவும் இருப்பதை உறுதி செய்தல்,அதன் மூலம் ஏற்படக்கூடிய பொது சுகாதாரக் கேடுகளைத் தவிர்ப்பது இன்றியமையாததாகும்”.

“எனவே குறிப்பிட்ட காலப்பகுதியில் உங்கள் அதிகார வரம்பிற்குள் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவுசெய்யப்படாத அனைத்து இறைச்சி அறுக்கும் கொல்களங்கள் மற்றும் இறைச்சிக் கடைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும். குறிப்பிட்ட காலப்பகுதியில் உங்கள் அதிகார வரம்பிற்குள் மாடு, எருமை, ஆடு, செம்மறியாடு மற்றும் பன்றி ஆகியவற்றை இறைச்சிக்காக வெட்டுவதையும்,மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி அல்லது பன்றி இறைச்சி விற்பனையையும் முற்றாகத் தடைசெய்யுமாறும் இத்தால் பணிக்கப்படுகின்றீர்கள்”.

“இப்பணிப்புரைக்கு இணங்கத் தவறினால்,மேற்கூறிய சட்டங்களின் விதிகளின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்” -,என மேலும் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பேரிடரில் உயிரிழந்த விலங்குகள் தொடர்பில் உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டுதல்கள்



இலங்கையில் ஏற்பட்ட பேரிடரினால் உயிரிழந்த விலங்குகளை எவ்வாறு பாதுகாப்பாக கையாளுவது என்பது குறித்த பொது சுகாதார வழிகாட்டுதல்களை உலக சுகாதார அமைப்பின் இலங்கைப் பிரிவு வெளியிட்டுள்ளது.

இதன்படி, வெள்ளத்திற்குப் பிறகு காணப்படும் உயிரிழந்த மீன்களைத் தொடவோ, சேகரிக்கவோ அல்லது உட்கொள்ளவோ கூடாது என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், உயிரிழந்த விலங்குகளைக் கையாளும் முன் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் அல்லது உள்ளூர் அதிகாரிகளிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற வேண்டும் என்றும் உலக சுகாதார அமைப்பு பொதுமக்களை வலியுறுத்தியுள்ளது.

தூய்மைப் பணிகளில் ஈடுபடுபவர்கள், கையுறைகள், காலணிகள் மற்றும் முகக்கவசங்கள் போன்ற பாதுகாப்பு உபகரணங்களை அணியவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

சவர்க்காரம் மற்றும் சுத்தமான தண்ணீரில் கைகளை நன்கு கழுவுதல் உள்ளிட்ட கடுமையான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றவும் உலக சுகாதார அமைப்பு பரிந்துரைக்கிறது.

உணவு மற்றும் நீர் ஆதாரங்களை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் எனவும் மேலும் சடலங்களை உடனடியாக அகற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வெள்ளம் பாதித்த பகுதிகளில் வெளியில் வேலை செய்யும் போது நுளம்பு விரட்டியைப் பயன்படுத்துமாறு உலக சுகாதார அமைப்பு அறிவுறுத்துகிறது.

கடுமையான வானிலையால் பாதிக்கப்பட்ட சமூகங்களில் சுகாதார அபாயங்களைக் குறைப்பதற்கும் பாதுகாப்பான மீட்சியை ஆதரிப்பதற்கும் இந்த வழிகாட்டுதல் பரந்த முயற்சிகளின் ஒரு பகுதியாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.



# நெய்னா தம்பி மரிக்கார் மொஹமட் தாஹிர் நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம்

நெய்னா தம்பி மரிக்கார் மொஹமட் தாஹிர் நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

சபாநாயகர் முன்னிலையில் அவர் நேற்று காலை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மொஹமட் இஸ்மைல் முத்து மொஹமட், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகிய நிலையில் நெய்னா தம்பி மரிக்கார் மொஹமட் தாஹிர், புதிய நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# மன்னார் மாவட்டத்தில் மட்டும் பேரிடரால் மொத்தம் 26 ஆயிரம் கால்நடைகள் சாவு

**(ந.லோகதயாளன்)**

இயற்கை அனர்த்தம் காரணமாக வடக்கு மாகாணத்தில் மிக அதிக பாதிப்பை எதிர்கொண்டது மன்னார் மாவட்டத்தில் 26 ஆயிரத்து 12 கால் நடைகள் உயிரிழந்துள்ளன என மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு உறுதி செய்துள்ளது.

40 வருட வரலாற்றில் முன்னெப்போதும் கண்டிராத வெள்ளப் பாதிப்பை எதிர்கொண்ட மன்னார் மாவட்டத்தில் ஒட்டு மொத்த மக்களும் பாதிப்படைந்துள்ளனர். இதேபோன்று மாவட்டத்தின் பொருளாதாரமாக விளங்கும் விவசாயம், கால்நடை ஆகிய இரு துறைகளும் அழிவடைந்தன.

இதில் 16 ஆயிரத்து 386 மாடுகளும், 9 ஆயிரத்து 628 ஆடுகளும் என மொத்தம் 26, 012 கால் நடைகள் அழிவடைந்துள்ளமையை மாவட்ட அனர்த்த முகாத்துவப் பிரிவு உறுதி செய்துள்ளது.

இந்தக் கால்நடைகளின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக 31 ஆயிரத்து 264 கோழிகளும் வெள்ளத்தில் அகப்பட்டு அள்ளுண்டும், உயிரிழந்தும் உள்ளன எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்த கால் நடைகள், கோழிகள் என்பனவற்றுடன் அவற்றின் தங்கு இடங்கள், பண்ணைகள் மட்டுமன்றி அவற்றிற்கான தீவனங்களும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டமையால் மாவட்டத்திற்கு ஆயிரம் மில்லியன் ரூபாவிற்கும் அதிக பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது.

| Department | Damaged Roads | | Damaged Tanks | | Canals, Tank Bunds & Others | | Livestock | | | | | Paddy & Other Crops | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Km | Mn | Nos. | Mn | Nos. | Mn | Cattle (Nos.) | Goat (Nos.) | Poultry (Nos.) | Total (Nos.) | Mn | Paddy (Acr.) | Other Crops (Acr.) | Total (Nos.) |
| Agrarian | | | 12 | 20 | | | | | | 0 | | 35000 | | 35000 |
| Irrigation(Cent.) | | | 40 | 427 | 15 | 740 | | | | 0 | | | | 0 |
| Irrigation(Pro.) | | | 4 | 160 | 2 | 3.5 | | | | 0 | | | | 0 |
| Dept.of Animal Production | | | | | | | 16384 | 9628 | 31264 | 31264 | | | | 0 |
| Agriculture | | | | | | | | | | | | | 627.5 | 627.5 |
| RDA | 3.28 | 74.9 | | | | | | | | | | | | |
| RDD | 24.4 | 780 | | | | | | | | | | | | |
| ACAD | 300 | 2100 | | | | | | | | | | | | |
| ACLG | 45.14 | 358 | | | | | | | | | | | | |
| Total | 372.8 | 3312.9 | 56 | 607 | 17 | 743.5 | 16384 | 9628 | 31264 | 31264 | 0 | 35000 | 627.5 | 35627.5 |







# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களுக்கு பருத்தித்துறை மக்களால் உலருணவுப் பொதி வழங்கல்

"டித்வா" புயலால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு மக்களுக்கு பருத்தித்துறை வர்தத்தக சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

பருத்தித்துறை வர்தத்தக சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட வெள்ள நிவாரண உதவு திட்டத்தில் பருத்தித்துறை முச்சக்கர வண்டி சேவைச் சங்கத்தினர் மற்றும் ஓடக்கரை சனசமூக நிலையம் இணைந்து செயற்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினரது வழிகாட்டுதலில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ராஜரத்தினம் விஜயகுமாரின் மேற்பார்வையில் இரணைப்பாலை, மல்லிகைத்தீவு, வள்ளிபுனம், விசுவமடு ஆகிய பகுதிகளில் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளான மக்களில் தெரிவு செய்யப்பட்ட 142 குடும்பங்களுக்கு உலருணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகள் மற்றும் பாய், தலையணை, குடிதண்ணீர் போத்தல்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

10 கிலோ அரிசி, 5 கிலோ மா, 2 கிலோ சீனி, 1 கிலோ பருப்பு உள்ளிட்ட தலா 5600 ரூபா பெறுமதியான உலருணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகள் நேரில் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

















# கடற்கரை தூய்மையாக்கும் பணி வடமராட்சியில் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம் வடமராட்சி பருத்தித்துறை கற்கோவளம் கடற்கரை தூய்மையாக்கும் பணி நேற்று எல்லங்குளம் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டன.

இந்தப் பணியில், எல்லங்குளம் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மேஜர் பண்டார தலைமையிலான இராணுவ அதிகாரிகள், வடமராட்சி வடக்கு பிரதேச செயலக அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

கழிவுகளை அகற்றும் பணியில் பருத்தித்துறை பிரதேச சபை உழவு இயந்திரங்கள் ஈடுபட்டன.









# அனர்த்த நிவாரண நிதி தொடர்பில் அர்ச்சுனா சபையில் குற்றச்சாட்டு



அதிதீவிர வானிலையால், யாழ்ப்பாண மாவட்டம் பாதிக்கப்பட்டதாக தெரிவித்து 36 கோடி ரூபா நிவாரண நிதியை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்துள்ளமை, வெட்கி தலை குனிய வேண்டிய விடயம் என நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவிப்பவர்களுக்கே, இந்த நிதி பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த நிலையில், அதிக பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ள மலையக மக்களுக்கு அந்த நிதியை பகிர்ந்தளிக்குமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

“வடக்கு மாகாணத்திற்கு 36 கோடி ரூபா அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சமத்துவம் என்ற விடயம் தெரியாமலே அரசாங்கம் செயற்படுவது மிகவும் கவலையாக இருக்கின்றது.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 25000 ரூபா கொடுக்கப்படுகின்றது. முழந்தால் அளவுக்கு தண்ணீர் வந்தவனுக்கும் அதே தொகைதான் வீடு முழுமையான மூடப்பட்டவருக்கும் அதே தொகைதான். 2ஆம் திகதி இடைத்தங்கல் முகாமொன்று அமைக்கப்பட்டுள்ளது. 30ஆம் திகதி மழை நின்ற பின்னர் 2ஆம் திகதி இடைத்தங்கல் முகாம் எதற்கு?

வடக்கு மற்றும் கிழக்கு உள்ளிட்ட சகல பிரதேசங்களிலும் படுமோசமான நிலைமையாக காணப்படுகிறது. யாழ்ப்பாணத்திற்காக 36 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அது தேசிய மக்கள் சக்தியினருக்கே வழங்கப்படுகிறது. அந்தப் பணம் யாழ்ப்பாணத்திற்கு தேவையில்லை. அதனை தோட்டப்புற மக்களுக்கு வழங்குங்கள். அரசாங்கத்தின் செயற்பாடு வெட்கக்கேடானது. எனக்கு கொடுக்கும் கெப் வாகனத்திற்கான பணத்தை மக்களுக்கு கொடுங்கள். எனக்கு அந்த வாகனம் தேவையில்லை.

வரவு – செலவுத்திட்டம் முடிந்த பின்னர் வேண்டுமென்றால் வடக்கிற்கு வாருங்கள். வேண்டுமென்றால் வடக்கிற்கும் கிழக்கிற்கும் புலம்பெயர்ந்தோரிடமிருந்து பணத்தை பெற்று தருகிறேன். தேவைப்பட்டால் தெற்கிற்கும் பகிர்கின்றேன். நான் ஆம் என்று கூறினால் புலம்பெயர் உறவுகள் பணத்தை அனுப்பி வைப்பார்கள்.

வெள்ளத்தில் சிக்கிய என்னை இராணுவ வீரர்களே காப்பாற்றினார்கள்.மற்றவர்களுக்காக தமது உயிரைத் தியாகம் செய்யும் இராணுவ வீரர்களை இந்த அரசாங்கம் சிப்பாய்கள் என அழைக்கின்றது . இது எவ்வளவு கீழ்த்தரமான வேலை அவர்களை இராணுவ வீரர்கள் என கௌரவமாக அழைக்க வேண்டும்.” – என்றார்.

# வருமான வரி அறிக்கைகளை சமர்ப்பிக்க கால அவகாசம்




2024 / 2025 ஆண்டுக்கான வருமான வரி அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, டிசம்பர் 8ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

தற்போதைய அறிவிப்பின்படி, இந்த அறிக்கை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி டிசம்பர் 31 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வருமான வரிக்கு பதிவு செய்துள்ள அனைவரும் நீடிக்கப்பட்ட காலத்துக்குள் தமது அறிக்கைகளைச் சமர்ப்பிக்க முடியும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# திருப்பரங்குன்றத்தை அயோத்தியாக மாற்ற முயற்சி: பா.ஜ.க. மீது கனிமொழி எம்.பி. குற்றச்சாட்டுகிறார்

பா.ஜ.கவைச் சேர்ந்தவர்கள் திருப்பரங்குன்றத்தை இன்னொரு அயோத்தியாக மாற்றிவிட முயற்சி செய்து கொண்டிருப்பதாக தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி குற்றம்சாட்டியுள்ளார்.

டில்லியில் நேற்று இது குறித்து அவர் உரையாற்றுகையில், "திருப்பரங்குன்றத்தில் பல நூற்றாண்டுகளாக எந்தப் பிரச்சினையும் இல்லாமல் மக்கள் கோயிலுக்குச் சென்று வழிபட்டு வருகின்றனர்.

அதே நேரத்தில் சிக்கந்தர் தர்காவுக்கும் சென்று வழிபடுகின்றனர். இந்த மதநல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் விதமாக மக்களிடையே மத குரோதத்தை உருவாக்கக்கூடிய விதமாக தேவையில்லாமல் சிலர் பிரச்னைகளை உருவாக்குகின்றனர்.

ஏற்கெனவே இந்த விஷயத்தில் நீதிமன்றம் தலையிட்டு தீர்ப்பு வழங்கிவிட்டது. இப்போது நீதிபதி சுவாமிநாதன் தேவையில்லாமல் தலையிட்டு அரசை மீறி ஒரு தீர்ப்பை வழங்கிஇருக்கிறார். தமிழக காவல் துறையைத் தாண்டி, மத்திய காவல்படையை தீபம் ஏற்றுவோருக்குத் துணையாக அனுப்பிவைக்கிறார்.

இதை பயன்படுத்திக்கொண்டு பா.ஜ.க. மத கலவரத்தை



உருவாக்க நினைத்தது. பாஜகவைச் சேர்ந்தவர்கள் இதை இன்னொரு அயோத்தியாக மாற்றிவிடவேண்டும் என்று முயற்சி செய்கின்றனர். நாடாளுமன்றத்தில் அமைச்சர்கள் கிரண் ரிஜிஜு மற்றும் எல்.முருகன் ஆகியோர் பேசியது கண்டிக்கத்தக்கது.

மனிதர்கள் மனிதர்களாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலையை குலைக்கத்தான் பா.ஜ.க. பாடுபட்டுக் கொண்டிருக்கிறது." – என்றார்.

# அமைதிப் பாதையை நோக்கி உலகத்தை வழிநடத்துவோம்

## புடின் முன்னிலையில் மோடி பேச்சு

உக்ரைனுடன் அமைதியான தீர்வுக்கு ரஷ்யா பாடுபடுகிறது எனவும் அமைதியின் பாதையில் பயணிப்பதன் மூலமே உலகம் பயனடையும் என்றும் தெரிவித்த பிரதமர் மோடி, அமைதிப் பாதையை நோக்கி உலகை வழிநடத்துவோம் என கூறினார்.

இரண்டு நாள் பயணமாக நேற்று முன்தினம் இந்தியா சென்ற ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், நேற்று முன்தினம் காலை குடியரசுத் தலைவர் மாளிகைக்கு சென்றார். அங்கு அவருக்கு இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப் பட்டது. குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவும், பிரதமர் மோடியும் அவரை வரவேற்றனர். இதையடுத்து, மகாத்மா காந்தியின் நினைவிடமான ராஜ்காட் சென்ற விளாடிமிர் புடின், அங்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

இதையடுத்து, டில்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் பிரதமர் மோடியை புடின் சந்தித்தார். அப்போது இரு தலைவர்களும் இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினர். பின்னர் இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது பிரதமர் மோடி கருத்து தெரிவிக்கையில்,

"ரஷ்ய ஜனாதிபதி புடின் தொலைநோக்குடன் செயல்படக்கூடிய தலைவர். உக்ரைன் நெருக்கடி தொடங்கியதில் இருந்து நாங்கள் தொடர்ந்து விவாதித்து வருகிறோம்.



ஒரு உண்மையான நண்பராக அவர் எல்லாவற்றையும் அவ்வப்போது எங்களுக்குத் தெரியப்படுத்தி வருகிறார். நம்பிக்கை ஒரு பெரிய பலம் என்று நான் நம்புகிறேன். இந்த விஷயத்தை (உக்ரைன் விவகாரம்) நான் உங்களுடன் பலமுறை விவாதித்துள்ளேன். அதனை உலகுக்கு முன்பாகவும் முன்வைத்துள்ளேன். அமைதியில்தான் நாடுகளின் நலன் அடங்கி இருக்கிறது. ஒன்றாக, உலகை அந்த பாதையை நோக்கி வழிநடத்துவோம்.

சமீபத்திய நாட்களில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் மூலம் உலகம் மீண்டும் அமைதியின் பாதைக்குத் திரும்பும் என்று நான் முழுமையாக நம்புகிறேன். இந்த விவகாரம் தொடர்பாக சமீப நாட்களில் நான் உலக தலைவர்களிடம் பேசும்போதெல்லாம், இந்த விவகாரத்தில் இந்தியா நடுநிலை வகிக்கவில்லை என்றும், இந்தியாவின் நிலைப்பாடு அமைதியின் பக்கமே உள்ளது என்றும் தெளிவாகக் கூறியுள்ளேன்.

அமைதிக்கான ஒவ்வொரு முயற்சியையும் நாங்கள் ஆதரிக்கிறோம். உக்ரைனுடன் அமைதி தீர்வை எட்ட ரஷ்யா பாடுபடுகிறது. நாம் அமைதிப் பாதையில் பயணித்தால் மட்டுமே உலகம் பயனடையும்.

பல்வேறு முன்னேற்றங்களுடன் இந்தியா – ரஷ்யா உச்சிமாநாடு முன்னேறிக் கொண்டிருக்கிறது. உங்களின் (புடின்) இந்த வருகை வரலாற்றுச் சிறப்புமிக்கது. இந்தியாவுக்கான உங்கள் முதல் பயணம் நிகழ்ந்து 25 வருடங்கள் ஆகிறது. அந்த முதல் வருகையின்போது, இரு நாடுகளின் கூட்டாண்மைக்கான அடித்தளம் அமைக்கப்பட்டது. எங்கள் இருவருக்குமான உறவும் 25 ஆண்டுகளாக உள்ளதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்." எனத் தெரிவித்தார்.

# இறையாண்மையுடன் கூடிய சுதந்திரமான கொள்கையை மோடி தலைமையிலான இந்திய அரசு பின்பற்றுகின்றது

## ரஷ்ய ஜனாதிபதி புடின் பாராட்டு

இறையாண்மையுடன் கூடிய சுதந்திரமான கொள்கையை பிரதமர் மோடி தலைமையிலான இந்திய அரசு பின்பற்றி வருவதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் பாராட்டு தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நடைபெற்ற இந்திய – ரஷ்ய வணிக மன்றத்தில் உரையாற்றுகையில் புடின் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எரிசக்தி பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்காகவும், எரிவாயு விநியோகத்துக்கான ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதற்காகவும் மட்டும் ரஷ்ய பிரதிநிதிகள் இந்தியா வரவில்லை. பல்வேறு துறைகளில் இந்தியாவுடனான எங்கள் பன்முக உறவை மேம்படுத்துவதே எங்களது நோக்கம்.

பல துறைகளில் இந்தியா பரந்த மற்றும் வளர்ந்து வரும் வாய்ப்புகளைக் கொண்டுள்ளது என்றும், ஆனால் இதுவரை இரு தரப்பினரும் அதை முழுமையாக பார்க்கும் நிலை உருவாகவில்லை என்றும் பிரதமர் மோடி, தனிப்பட்ட முறையிலான உரையாடல்களின்போது என்னிடம் அடிக்கடி தெரிவிப்பார். அதற்காகவே, இந்திய – ரஷ்ய வணிக மன்றத்தை கூட்ட நாங்கள் முடிவு செய்தோம்.

பிரதமர் மோடியின் தலைமையில் இந்தியா இறையாண்மையுடன் கூடிய சுதந்திரமான (வெளியுறவு) கொள்கையைப் பின்பற்றி வருகிறது. அதேநேரத்தில், மிகச் சிறந்த பலன்களையும் அடைந்து வருகிறது. இந்தியப் பொருளாதாரம் இன்று உலகின் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் ஒன்று. பிரதமர் மோடியின் சிறந்த பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் இந்தியாவில் தயாரிப்போம் திட்டம் போன்ற மைல்கல் முயற்சிகளுக்கு நன்றி. இந்தியா தொழில்நுட்ப ரீதியாக இறையாண்மை கொண்டதாக மாறி வருகிறது. இந்தியாவின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் மருந்துத் துறைகள் உலகில் முன்னணி இடத்தைப் பிடித்துள்ளன.




ரஷ்யாவும் இந்தியாவும் நீண்டகால வர்த்தக கூட்டாளிகள். கடந்த மூன்று ஆண்டுகளில் 80 வீதம் வரை இருதரப்பு வர்த்தகம் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு இருதரப்பு வர்த்தகம் 64 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற சாதனை அளவை எட்டியது. இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.


ரஷ்யாவும் இந்தியாவும் பெரிய நுகர்வோர் சந்தைகளைக் கொண்டுள்ளன. இந்தியா தொழில்நுட்ப ரீதியாக இறையாண்மை கொண்டதாக மாறி வருகிறது என்பதையும், இந்தியாவின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் மருந்துத் துறைகள் உலகில் முன்னணி இடத்தைப் பிடித்துள்ளன என்பதையும் இதன்மூலம் இந்தியா பலனடைந்து வருகிறது என்பதையும் மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்குமான பன்முக பொருளாதார உறவுகளை ஆழப்படுத்துவதில் நான் கவனம் செலுத்துகிறேன். இன்றைய சந்திப்புகளைத் தொடர்ந்து, இந்திய – ரஷ்ய பொருளாதார ஒத்துழைப்பை வளர்ப்பதற்கான ஒரு ஆவணத்தை நாங்கள் ஏற்றுக்கொண்டோம். ரஷ்ய வணிக நிறுவனங்கள், இந்தியாவின் பொருட்கள் மற்றும் சேவைகளை இன்னும் அதிக அளவில் பெறுவதற்கு தயாராக உள்ளன. இந்திய வணிகர்களின் அனைத்து முயற்சிகளையும் ரஷ்யா ஆதரிக்கும் என உறுதியளிக்க விரும்புகிறேன்.” என தெரிவித்துள்ளார்.

# உக்ரைன் போரை நிறுத்துவதற்கு புடினிடம் வலியுறுத்த வேண்டும்

## சீன ஜனாதிபதியிடம் பிரான்ஸ் ஜனாதிபதி வேண்டுகோள்





உக்ரைனுடன் போர் நிறுத்தம் செய்ய ரஷ்யாவை சீனா வலியுறுத்த வேண்டும் என சீன ஜனாதிபதியிடம் ஜி ஜின்பிங்கிடம், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சீனாவுக்கு 3 நாள் அரசு முறைப் பயணமாக பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான் சென்றுள்ளார். அவர் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை நேற்று சந்தித்தார். அதன்பின் மேக்ரான் அளித்த பேட்டியில்,

“சர்வதேச ஒழுங்கு முறை காரணமாக பல ஆண்டுகளாக உலகில் அமைதி நிலவி வந்தது. அந்த ஒழுங்கு சிதையும் அபாயம் தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் சீனா – பிரான்ஸ் இடையேயான பேச்சுவார்த்தை மிக முக்கியமானது. உக்ரைனின் முக்கிய கட்டமைப்புகளை குறிவைத்து ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது. அதனால் கூடிய விரைவில் இரு நாடுகள் இடையே போர் நிறுத்தம் ஏற்பட நாம் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். எங்களின் முயற்சியில் சீனா இணையும் என நம்புகிறேன்.” என்று தெரிவித்தார்.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் அளித்த பேட்டியில்,

“அமைதியை நோக்கிய அனைத்து முயற்சிகளையும் சீனா ஆதரிக்கிறது. அனைத்து தரப்பினரும் ஏற்கும்படியான அமைதி ஒப்பந்தம் ஏற்பட வேண்டும். காசாவின் மீட்பு பணிக்கு சீனா 100 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி அளிக்கவுள்ளது. ஏரோஸ்பேஸ், ஏரோனாடிக்ஸ், அணு சக்தி, பசுமை தொழில்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகிய துறைகளில் இரு நாடுகளும் அதிக ஒத்துழைப்புடன் செயல்பட ஒப்புக் கொண்டுள்ளோம்.” – என்றார்.






# நிவாரணங்கள் மக்களை விரைந்து சென்றடைய அரசு துரித பொறிமுறை உருவாக்க வேண்டும்

## மட்டக்களப்பு எம்.பி. சாணக்கியன் கோரிக்கை

நிவாரணங்கள் மக்களை உடனடியாக சென்றடைய அரசு துரித பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. இரா. சாணக்கியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றைய தினம் மட்டக்களப்பு சந்திவெளி மற்றும் முறாவோடை பிரதேசங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து அவர்களது தேவை தொடர்பில் சாணக்கியன் கலந்துரையாடினார். அந்தச் சமயமே மேற்படி கோரிக்கையை அவர் முன்வைத்தார்.

மட்டக்களப்பு சந்திவெளி மற்றும் முறாவோடை பிரதேசங்களில் பாதிப்புற்ற மக்களுக்குத் தேவையான நிவாரண உதவிகள் மற்றும் அத்தியாவசிய பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டன.

அவர்களுக்குரிய முதலாவது தொகுதி அத்தியாவசிய நிவாரணப் பொருள்கள் சாணக்கியன் தலைமையிலான குழுவினராலேயே வழங்கப்பட்டன.

நாடு முழுவதிலும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற வகையில் நிவாரண உதவிகள் மக்களிடம் சென்றடைவதில் குறிப்பிட்ட கால அவகாசம் எடுக்கின்றது. இதற்கான பொறிமுறையை அரசு உடனடியாக தொடர்புள்ள அரச ஊழியர்களை கொண்டு வினைத்திறனாகக் கையாள வேண்டும் என்றார் சாணக்கியன் எம்.பி.

இதன் போது கோறளைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கல்குடா தொகுதி பொறுப்பாளரும் கலந்து கொண்டார்கள்.

















# நோர்வூட் பிரதேச செயலகத்தை நிரந்தரமாக ஹட்டனுக்கு இடம்மாற்ற மறைமுகத் திட்டமா?

## முன்னாள் பிரதேச சபைத் தலைவர் குழந்தைவேல் ரவி கேள்வி

(மஸ்கெலியா நிருபர் )

நல்லாட்சி அரசாங்கத்தில் பெருந்தோட்ட மக்களின் வசதி கருதி நோர்வூட்டில் உருவாக்கப்பட்ட பிரதேச செயலகத்தை உத்தியோகத்தர்களின் போக்குவரத்து வசதிக்காக ஹட்டனுக்கு இடம் மாற்ற சில மாதங்களுக்கு முன்னர் மேற்கொண்ட முயற்சி தோல்வி கண்டிருந்த நிலையில், இப்போது மழையைக் காரணம் காட்டி ஹட்டனில் அது அமைக்கப்பட்டுள்ளமை, அங்கு நிரந்தரமாக அதனை அமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் சதி முயற்சியா என முன்னாள் பிரதேச சபைத் தலைவரும் இந்நாள் உறுப்பினருமான கே. குழந்தைவேல் ரவி கேள்வி எழுப்பியுள்ளார்.



இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

மஸ்கெலியா, சாமிமலை, நல்லதண்ணீர், பொகவந்தலாவ, நோர்வூட், புளியாவத்தை, டிக்கோயா, அட்டன் பிரதேசமக்கள்தங்கள்தேவைகளுக்காக கினிகத்தேனையில் அமைந்திருந்த பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகத்துக்கு செல்ல வேண்டிய நிலையில் இருந்தார்கள். இதைக் கருத்திற் கொண்டு 2015 இல் நுவரெலியா மாவட்டத்தில் கொட்டகலை, அக்கரபத்தனை, நோர்வூட், மஸ்கெலியா ஆகிய நான்கு பிரதேச சபைகள் புதிதாக உருவாக்கப்பட்டிருந்தன.

அதேபோல், தலவாக்கலை, நோர்வூட், முதலான நான்கு பிரதேச செயலகங்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. எனினும், நோர்வூட் பிரதேச செயலகத்தை உடனடியாக தரமுயர்த்த உயர் மட்டத்தில் விருப்பம் இருந்ததாகத் தெரியவில்லை. உப செயலகமாக 2021-2023 வரை தியசிரிகமவில் அது இயங்கி வந்தது. இ.தொ.கா. பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் அமைச்சராக இருந்த போது நோர்வூட் பிரதேச செயலகமாக தரமுயர்த்தி 2023-2025 வரை தியசிரிகமவில் இயங்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

சில மாதங்களுக்கு முன்னர் நோர்வூட் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களால் தமது போக்குவரத்து வசதியைக் கருத்திற் கொண்டு நோர்வூட் பிரதேச செயலகத்தை ஹட்டன் ரயில் நிலைய வளாகக் கட்டடத்தில் அமைப்பதற்கு முயற்சிகள் மேகொள்ளப்பட்டிருந்தன. நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் நாடாளுமன்றத்திலும் இது தொடர்பாகக் குரல் எழுப்பியமையைத் தொடர்ந்து அந்த முயற்சி கைவிடப்பட்டிருந்தது.

இருந்தும், கடந்த மாதக் கடைசியில் பெய்த பலத்த மழையின் போது, நோர்வூட்பிரதேசசபைசெயலகத்துக்குள் வெள்ளம் வந்து விட்டதாகவும், தம்மால் அங்கு கடமையாற்ற முடியாது என்றும் அங்குள்ள உத்தியோகத்தர்கள் ஆட்சேபனை தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்திருந்தார்கள். அதற்கு ஆதரவாக அன்றைய தினம் அங்கு சென்றிருந்த பொது மக்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தார்கள்.

இதைக் காரணம் காட்டி உடனடியாக நோர்வூட் பிரதேச செயலகம் ஹட்டன் ரயில் நிலையத்துக்கு மாற்றப்பட்டு அங்கு இயங்கி வருகின்றது. ஏற்கனவே பிரதேச செயலகத்தை ஹட்டனுக்கு மாற்ற எடுத்த முயற்சிகள் தோல்வி கண்ட போதிலும், இப்போது மழையைக் காரணம் காட்டி மாற்றப்பட்டுள்ளமை பொது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த இடம் மாற்றம் மஸ்கெலியா ராஜமாலை, நல்லதண்ணீர், பொகவந்தலவ லொய்னோன் முதலான இடங்களிலிருந்து இலகுவாக தியசிரி கமவுக்கு வந்த மக்கள் மேலும் 10 கிலோ மீற்ற தூரம் பயணித்து, நேரத்தையும் பணத்தையும் செலவு செய்து அட்டன் நகருக்க வந்து மீண்டும் திரும்பிச் செல்ல வேண்டிய நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது.

பிரதேச செயலகம் என்பது பொது மக்களின் தேவைக்கா அல்லது அங்கு கடமை புரிகின்ற உத்தியோகத்தர்களின் வசதிக்கா என்ற கேள்வி எழுகிறது.

அத்தோடு, ஹட்டன் நகருக்கு மாற்றப்பட்டுள்ள செயலகக் கட்டடத்துக்கு மாதாந்தம் வாடகை செலுத்துவதற்கு பெருந் தொகையான பணத்தையும் செலவிட வேண்டியுள்ளது. ஜனாதிபதி வீண் விரயங்களைக் குறைக்க நடவடிக்கை எடுத்து வருகின்ற நேரத்தில் இத்தகைய மேலதிக செலவுக்கு மக்களின் வரிப்பணத்தை செலவிடாமல், அந்தப் பணத்தைக் கொண்டு முன்பு இருந்த கட்டடத்தில் திருத்தப் பணிகளை மேற்கொண்டு மழைக் காலத்தில் ஒழுகாமல் இருக்க வசதி செய்து கொடுக்க முடியாதா? அதை விடுத்து ஹட்டனில் செயலகத்தை தற்காலிகமாக அமைத்துள்ளதாகக் கூறப்படுவது, அங்கு நிரந்தரமாக நிறுவுவதற்கு மறைமுகமாக மேற்கொள்ளப்படும் சூழ்ச்சியாகவே எண்ணத் தோன்றுகிறது.

அண்மையில் பெய்த மழை காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் நோர்வூட் பிரதேச செயலகத்துக்கு அசுவெசும உட்பட தமது தேவைகளுக்காக வந்து போக வேண்டியுள்ளமையால் மீண்டும் நோர்வூட் செயலகத்தை தியசிரிகம பகுதியில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். - என்றும் தெரிவித்தார்.

# அனர்த்தத்தில் சேதமான 1,160 சிறிய குளங்கள்

அனர்த்த நிலைமையால் விவசாய அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான 1160 சிறு குளங்கள் சேதமடைந்துள்ளன.

இவற்றில் 125 சிறு குளங்களுக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளன என விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க ரணதுங்க தெரிவித்துள்ளார்.

747 சிறு குளங்களுக்கு பகுதியளவில் சேதமேற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அனுராதபுரம், வவுனியா மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களிலுள்ள சிறு குளங்களே அதிகளவில் சேதமடைந்துள்ளன.

இந்த குளங்களுக்கு முன்னுரிமையளித்து அவற்றை புனர்நிர்மாணம் செய்வதற்கான விரைவான வேலைத் திட்டங்களை ஆரம்பித்துள்ளதாக விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்கான நிதி ஒதுக்கீடும் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் 15,958 குளங்கள் தற்போது பராமரிக்கப்படுகின்றன.

# இந்த அரசின் ஒரு வருட ஆட்சி பூர்த்தியாகியும் கூட தையிட்டி சட்ட விரோத விகாரைக்குத் தீர்வு இல்லை

## பாதிப்புற்றோருக்கு எந்த நீதியும் கிட்டவில்லை என்கிறார் அருட்தந்தை சத்திவேல்



(பா.சதீசன்)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனது ஒரு வருட ஆட்சியை கொண்டாடி முடித்திருக்கும் நிலையில் தையிட்டி விகாரை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த நீதியும் இதுவரை கிட்டவில்லை என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் நேற்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

தையிட்டி திஸ்ஸ விகாரை என்பது நாட்டின் சட்டத்திற்கு எதிராகவும் பௌத்த தர்மத்திற்கு எதிராகவும் சிங்கள பௌத்த ஆதிக்க மன நிலையில் நின்று கட்டப்பட்ட சட்டவிரோத கட்டடமாகும். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக மக்கள் அறவழியில் போராட்டம் நடத்தி வரும் சூழ்நிலையில் நேற்றைய தினம் (வியாழனன்று) போராட்டத்தின் போது இடம்பெற்ற பொலிஸாரின் அராஜகம் சிங்கள பௌத்த அடக்குமுறை என்பதை ஆணித்தரமாக கூறுகின்றமையோடு இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இனவாதம், மதவாதம் என்பவற்றிற்கு எதிரான அரசாங்கமாக தம்மை கூறிக் கொள்ளும் தற்போதைய தேசிய மக்கள் சக்தியும் அதன் தலைவர் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவும் பொலிஸாரின் அடவாடித்தனத்திற்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுத்து அராஜகத்தில் ஈடுபாட்டோருக்கு தண்டனை பெற்றுக் கொடுப்பதோடு விகாரை விடயத்தில் நீதியை நிலை நாட்ட வேண்டும் எனவும் கேட்கின்றோம்.

கடந்த நவம்பர் மாத பௌர்ணமி தினத்தன்று தையிட்டியில் அகிம்சை போராட்டத்தில் ஈடுபட்டவர்களையும், அப்பிரதேசத்தின் இந்து பக்தர்களை விகாரைக்கு அண்மையில் உள்ள இந்து கோவிலிலும், சட்டவிரோத விகாரையின் பிக்குவாக இருப்பவரை அவர் தாங்கி இருக்கும் சட்டவிரோத கட்டடத்திலும் சந்தித்தேன்.

அன்று பிக்குவோடு நடந்த உரையாடலில் பாதிக்கப்பட்ட மக்களோடு உரையாடல் ஒழுங்கு செய்தால் வருவீர்களா என்று கேட்ட போது அதற்கு அவர் மறுத்துவிட்டார். அவர் அவ்விகாரையினதும் அப்பிரதேசத்தினதும் மதகுருவாக இருந்தால் பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்க அழைப்பு ஏற்படுத்திய போது வந்திருப்பார். ஆனால் அதற்கு மறுத்தமையில் அவரது சிங்கள - பௌத்த மனநிலையையும் இராணுவப் பாதுகாப்புடன் இருக்கும் மனப்பாங்கையுமே காணக்கூடியதாக இருந்தது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனது ஒரு வருட ஆட்சியை கொண்டாடி முடித்திருக்கும் நிலையில் தையிட்டி விகாரை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த நீதியும் இதுவரை கிட்டவில்லை. நீதி கிட்டுவதற்கான எந்தவிதமான அறிகுறியும் இதுவரை தென்படவில்லை. ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் நீதி கேட்டு போராடுபவர்களை அச்சுறுத்துவதற்கு பொலிஸாரக் கடமையில் ஈடுபடுத்துவதும் என்றுமில்லாதவாறு இம் மாதம் அடக்குமுறையை அவிழ்த்துவிட்டு அரசாங்கம் வேடிக்கை பார்ப்பதுமாகவே தோன்றுகிறது.

சட்டவிரோத விகாரைக் கட்டடத்தால் நிலமிழந்து பாதிக்கப்பட்டவரின் சார்பில் நின்று நீதி கேட்டு போராடுபவர்கள் கடந்த காலங்களிலும் பாதை ஓரத்தில் தற்காலிக கொட்டில் அமைத்து போராட்டம் நடத்தி வந்திருக்கின்றனர். இந்த கொட்டிலால் எவருக்கும், எந்த விதமான பாதிப்பும் ஏற்படவில்லை. பொலிஸாரின் வாகனங்களும் ஏனையோரின் வாகனங்களும் அப் பாதை வழியே சென்று வந்திருக்கின்றன. இந்தத் தடவை அது மக்களுக்கும் வழிபாட்டுக்கு வருகின்றவர்களுக்கும் தடையாக இருக்கின்றது என்று அதனைப் பலவந்தமாக பொலிஸார் அகற்றியமையோடு பெண்கள் மீதும் தாக்குதல் நடத்தியமையை மனித உரிமைக்கு எதிரான செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம்.

வடக்கு கிழக்கு தமிழர்களின் அடிப்படை உரிமைகளையும் அவர்களின் அரசியல் அபிலாசைகளையும் மதிப்பதற்கும், கௌரவிப்பதற்கும், இனத்துவ அடையாளங்களை பாதுகாப்பதற்கும் எந்த ஆட்சியாளர்களும் ஆயத்தமில்லை என்பதே உண்மை.

தமிழர் தம் தாயகத்தில் படையினர் மற்றும் பொலிஸார் சட்டத்தை மிதித்து செயல்படுகின்றனர் என்பதற்கான சர்வதேசத்திற்கு சாட்சியாகவே தையிட்டி சட்டவிரோத விகாரை அமைந்துள்ளது. அது மட்டுமல்ல, சிங்கள - பௌத்தம் தமிழர்களுக்கு எதிரான செயற்பாட்டில் நாட்டின் சட்டத்தை மீறும் என்பதற்கு மிகப்பெரிய அடையாளமே சட்டவிரோத விகாரை கட்டடம் எனலாம்.

தையிட்டி சட்டவிரோத விகாரை கட்டடத்திற்கு எதிரான அறப்போராட்டம் நீதி கிடைக்கும் வரை தொடரும். இதனை கட்சி அரசியலாக எவரும் கொச்சைப்படுத்தாது அரசியல் போராட்டமாக கருதி அனைத்து தரப்பினரும் ஆதரவளிக்குமாறு கூறுகின்றோம். அதனை விடுத்து அமைதி காத்து இனப்படுகொலை ஆட்சியாளர்களுக்கு ஆதரவளிப்பது என்பது எம்மை நாமே அழித்து கொள்வதாக அமையும்.

மேலும் நாட்டின் சட்டம் அனைவருக்கும் சமம் என அடிக்கடி கூறும் தற்போதைய ஜனாதிபதி அதனை தனது அரசியலுக்காக மட்டும் பாவிக்காது, லஞ்சம், ஊழல் என்பதற்கு மட்டும் கட்டுப்படுத்தாது, இனங்களின் தனித்துவம், அவர்களின் அடையாளப் பாதுகாப்பு, அரசியல் உறுதிபாட்டு பாதுகாப்பு என்பவற்றுக்கும் பயன்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை எடுக்கின்றோம். - என்று உள்ளது.

# 15 நாள்களுக்கு முன்பே அதிகாரிகள் எச்சரித்தனர் அப்போது தூங்கி விட்டு இப்போது சீறுகிறது அரசு!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசனம்



வானிலை அதிகாரிகள் 15 நாள்களாக முன்அறிவிப்புச் செய்து கொண்டிருந்த வேளை, தூங்கிக் கொண்டிருந்த அரசாங்கம், இப்போது வானிலை அதிகாரிகள் மீது குற்றம் சாட்டி வருகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசனம் தெரிவித்திருக்கின்றார்.

நாட்டில் ஏற்பட்ட சூறாவளிப் புயல் குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களுக்கு தகவல் தெரிவிக்கவில்லை என்று சிலர் இப்போது குற்றம் சாட்டி வருகின்றனர். ஆனால் இந்த முன்னறிவுப்பை உரிய தரப்பினர் நவம்பர் 11 முதல் வெளியிட்டு வந்தனர். வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரிகள், ஊடகங்கள் முன்வந்து, வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு மற்றும் குறைந்த காற்ற முத்த தாழ்வுப் பகுதி காரணமாக, தென் கிழக்கு கடல் பகுதிகளில் கடல் சீற்றமும், பலத்த காற்றும் வீசுவதோடு, இலங்கையின் சில பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும், 100 மி.மீட்டருக்கும் அதிகமான மழை பெய்யும் மற்றும் குறைந்த காற்றமுத்த தாழ்வுப் பகுதி உருவாகும் என்று தெரிவித்தனர். இது பின்னர் குறைந்த காற்றமுத்த தாழ்வு மண்டலமாக மாறி புயலாக மாறக்கூடும் என்று முழு நாட்டிற்கும் தெரிவித்து வந்தனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு முன்வந்து இது குறித்து தெரியப்படுத்திய காலப்பிரிவில் நாட்டில் மழை காணப்படவில்லை. வளிமண்டலவியல் திணைக்களம், இடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதானிகள் மற்றும் கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பிரதானிகள் ஊடக சந்திப்புகளை நடத்தி, இந்த புயல் அவதானம் தொடர்பில் மக்களை தெளிவூட்டி வந்தனர். நவம்பர் 11, நவம்பர் 12, நவம்பர் 14 மற்றும் நவம்பர் 17 ஆகிய திகதிகளில் அதிகாரிகள் இது தொடர்பாக வெளிக் கொணர்ந்து முன்னறிப்புச் செய்து கொண்டே வந்தனர். வளிமண்டலவியல் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் கூட நவம்பர் 21 மற்றும் நவம்பர் 22 ஆகிய திகதிகளில் இந்த விடயம் குறித்து நாட்டிற்கு அறிவித்தார். நவம்பர் 23 மற்றும் 24 ஆகிய திகதிகளில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்கள் மீண்டும் ஒருமுறை பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் பணியைச் செய்து வந்தன என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நவம்பர் 11 முதல் நவம்பர் 15 வரை இந்த மோசமான வானிலை நிலைமை தொடர்பிலான விடயங்கள் வெளிவந்த போதும் கூட, இடர் முகாமைத்தைவ நிலையத்தின் நடவடிக்கைகளின் செயலற்ற தன்மைக்கான காரணங்கள் யாது என கேள்வி எழுப்புகிறோம்.

தற்சமயம் வளிமண்டலவியல் திணைக்களத்தினரை நோக்கி விரல் நீட்டாமல் இடர் முகாமைத்துவ செயல்பாட்டில் காணப்படும் பிரச்சினைகளைச் சரிசெய்ய வேண்டும். இந்த சூறாவளி புயலால் இந்த நாட்டு மக்கள் தங்கள் உயிர்களையும் சொத்துக்களையும் இழந்து, அனாதைகளாக விடப்பட்டுள்ளனர். நாட்டில் பல துறைகள் சீர்குலைந்து, மில்லியன் கணக்கான மக்கள் வீழுழந்து தவிக்கும் நேரத்தில், இந்த மோசமான வானிலை குறித்த விடயங்களைச் சரியாக முன்வைத்த அதிகாரிகள் மீது அச்சுறுத்தல்களை விடுக்காது, இந்தப் பேரழிவிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு, தவறுகளைத் திருத்திக் கொள்வதே மிக உயர்ந்த கடமையாக அமையும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று விசேட கூற்றை முன்வைத்து கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளை அரசியலாக்க வேண்டாம் என்றும், வெளித்தெரியும் விதமாக இந்த செயல்முறையை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாகவும், விரைவான சேவைகளையும் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே, அவசரகால நிலையை பிரகடனப்படுத்துமாறு எதிர்க்கட்சி கோரியது. ஆனால் அரசாங்கம் ஊடகங்களை அடக்குவதற்கு முயற்சி செய்து வருகின்றது. இவ்வாறு ஊடகங்களை அடக்குமுறைக்குட்படுத்த நாம் இந்த அவசரகால நிலையைக் கோரவில்லை. - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார்.

---

# அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களது சுகாதார நிலையை ஆராய நடமாடும் குழு

## சுகாதார அமைச்சு தகவல்

அனர்த்தங்களால் இடம்பெயர்ந்த மற்றும் கிராமங்களில் வசிப்போரின் சுகாதார நிலைமை தொடர்பில் ஆராய்வதற்கு நடமாடும் குழுக்களை ஈடுபடுத்தியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்படி குழுக்களின் ஊடாக தொற்றா நோய்களின் தாக்கத்திற்கு உள்ளாகும் மக்களுக்கு தேவையான மருந்துகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களுக்கான மருத்துவ சேவைகளை வழங்க தன்னார்வமாக முன்வந்துள்ள வைத்தியர்களின் பங்கேற்புடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இதற்கான பொருத்தமான இடங்களை பெற்றுக்கொள்ள மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தை தொடர்புகொள்ளுமாறு சுகாதார பிரதியமைச்சர் வைத்தியர் ஹங்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

எலிக்காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்கான மருந்துகள், அனைத்து பொது சுகாதார பரிசோதகர்களிடமும் காணப்படுவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள்- 06.12.2025




இன்று வெற்றிகரமான பலன்கள் காண உறுதியும் திட்டமிடலும் அவசியம். பொறுப்புகள் அதிகமாக இருந்தாலும் நீங்கள் உற்சாகமாக இருக்க வேண்டும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படாது. கவனக்குறைவு காரணமாக பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் நடக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் மகிழ்ச்சி நிலவும். ஆழ்ந்த புரிந்துணர்வு ஏற்பட தேவையற்ற தீய உணர்வுகளை தவிர்க்கவும்.

இன்று வாய்ப்புக்கள் குறைந்து காணப்படும். சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் மகிழ்ச்சியான தருணங் களை அனுபவித்து மகிழ்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

புதிய வேலை வாய்ப்புகள் உங்க ளுக்கு மகிழ்ச்சி அளிக்கும். பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். நீங்கள் பணிகளை எந்த இடையூறும் இல்லாமல் மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உங்கள் குடும்பத்தில் நடக்கவிருக்கும் ஒரு முக்கியமான நிகழ்ச்சி பற்றி உங்கள் துணையுடன் வெளிப்படையாக பேசுவீர்கள்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்கும். சேமிப்பு நிலை சிறப்பக இருக்கும். இதனால் நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாளாக அமையும். உங்கள் விருப்பங்கள் பூர்த்தியாகலாம் நீங்கள் சமநிலையோடு காணப்படுவீர்கள். அனைத்து விஷயங்களிலும் கட்டுப்பாட்டுடன் இருப்பீர்கள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான சூழல் காணப்படும். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு வந்து சேரும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல உறவை பராமரிக்க இயலும்.

சுதந்திரமான நிதி நிலைமையும் நிதியில் ஸ்திரத்தன்மையும் காணப்படும். நீங்கள் உங்கள் நிதிநிலையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இதனால் நீங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள்.




இன்று பயணம் செய்வதில் முனைந்து இருப்பீர்கள். உங்களைச் சுற்றி மாற்றங்கள் ஏற்படுவதை உணர்வீர்கள்.மற்றவர்களுடன் பேசும்போது கவனமாகப் பேச வேண்டும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது சிறந்த பலன் தரும்.

உங்கள் கடின உழைப்பின் காரணமாக உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.படைப்பாற்றல், புதுமையான திறமை மற்றும் திட்டமிடல் மூலம் நீங்கள் பணியை சிறப்பாக செய்வீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் சமநிலையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உறவில் திருப்தியை தக்க வைக்க நீங்கள் எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும்.




இன்று நற்பலன் காண நீங்கள் மேற்கொள்ளும் செயல்கள் பய னுள்ளதாக இருக்கும். இறை மந்திரம் மற்றும் ஸ்லோகங்கள் கூறுவதன் மூலம் நீங்கள் திருப் தியாக உணர்வீர்கள்.

உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங்கமைத்து மேற்கொள்வதன் மூலம் வெற்றி காண்பீர்கள்.

உங்கள் மனதில் குழப்பமான எண்ணங்கள் காணப்படும். அதனால் உங்கள் துணையுடன் நேர்மறையான உணர்வுகளை வெளிப்படுத்த மாட்டீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க நீங்கள் நம்பிக்கையான உணர்வுகளை பகிர்ந்து கொள்ள வேண்டும்.




இன்று நீங்கள் அதிக முயற்சி எடுப் பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். இது உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடத்தில் சாதகமான சூழ்நிலை கள் காணப்படும். இதனால் நீங்கள் பணிகளை மகிழ்ச்சியுடன் மேற்கொள் வீர்கள். கடினமான பணிகளையும் திட்டமிட்டு எளிமையாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பேசுவீர்கள். இது உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.பணவரவு நிலையாகவும் அதிக அளவிலும் காணப்படும்.




இன்று மிகவும் மகிழ்ச்சியான நாள். மறக்கமுடியாத தருணங்களை அனுபவிப்பீர்கள். சவாலான பணிக ளையும் எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் திறமை மூலம் நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். நீங்கள் கடினமான பணிகளையும் எளிமையாக ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் உற்சாகமான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் நெருங்கிய நண்பரின் திருமண வைபவத்தில் கலந்து கொள்வதன் மூலம் நீங்கள் இருவரும் நெருக்கமாவீரகள்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். நீங்கள் அதிக பணம் சம்பாதிப்பீர்கள். இது உங்கள் எதிர் காலத்திற்கு உதவும்.

உங்களின் சந்தோஷமான மனநிலை காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியம் பராமரிப்பீர்கள்.




முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. இன்று உங் கள் செயல்களில் கவனம் கொள்ள வேண்டிய நாள். உணர்ச்சிவசப் படுவதலை தவிர்க்க வேண்டும். செயல்களை திட்டமிட்டு மேற் கொண்டால் வெற்றி பெறலாம்.

நீங்கள் சக பணியாளர்களால் சில பிரச்சினைகளை எதிர்கொள்வீர்கள். பொறுமையுடன் தொடர்ந்து செயலாற்றுங்கள்.

தகவல் தொடர்பில் ஏற்படும் பிரச்சினை காரணமாக கருத்து வேறுபாடு காணப்படும். இது புரிந்துணர் வையும் நல்லிணக்கத்தையும் பாதிக்கும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள்- 06.12.2025




இன்று சவால்கள் நிறைந்து காணப்படுவதால் சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் வழக்கமான பணிகளை மேற்கொள்வதை கடினமாக உணர்வீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். அமைதியாக இருப்பதன் மூலம் நன்மை பெறலாம்.

பணியின்போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இந்த சூழ்நிலையை சமாளிக்க பொறுமை அவசியம். சக பணியாளர்களுடன் அமைதியான முறையில் உறவாட வேண்டும். உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உறவை தக்க வைத்துக் கொள்ள நட்பான அணுகுமுறை தேவை. உறவில் நல்லிணக்கம் ஏற்பட இருவரும் நல்ல புரிந்துணர்வை பராமரிக்க வேண்டும்.




இன்று உங்களுக்கு சீரான பலன்கள் கிடைக்கும் நாள்.இன்று நீங்கள் புத்துணர்ச்சியுடன் இருப்பதாக உணர்வீர்கள். இன்று சுப நிகழ்சிகள் நடப்பதற்கான சாத்தியம் உள்ளது.

பணியைப் பொறுத்தவரை முன்னேற்றகரமான பலனுக்கு சாத்தியம் உள்ளது. உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள்.

நண்பரின் திருமண வைபவத்தில் கலந்து கொள்வதன் மூலம் இன்றைய நாள் இனிமையாக இருக்கும்.இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணப்புழக்கம் சீராக இருக்கும். சேமிப்பு நிலை உயர்வதற்கான சாத்தியம் உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பதற்றமான மன நிலையில் காணப்படுவீர்கள். அதனால் உங்கள் முயற்சிக்கு வெற்றி கிடைப்பது கடினம். உங்கள் அன்றாட செயல்களை மேற்கொள்ளும் போது கவனம் தேவை.

குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பது கடினமாக காணப்படும். உங்கள் பணிகளை முடிப்பதில் தாமதம் காணப்படும்.

தவறான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் சூடான வாக்குவதங்கள் ஏற்படும். இது உறவில் மகிழ்ச்சியையும் அமைதியையும் பாதிக்கும்.

இன்று வீணான செலவுகள் காணப்படும். உங்கள் குடும்பத்திற்காக தேவையற்ற செலவுகளை செய்வீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்த நிச்சயமற்ற பலன்கள் காணப்படும். எல்லா விஷயங்களிலும் பொறுமை மேற்கொள்வதன் மூலம் வெற்றி காணலாம்.

பணியில் கவனக்குறைவு ஏற்படலாம். எனவே நீங்கள் மேற்கொள்ளும் பணிகளில் கவனம் தேவை.

உங்கள் துணையின் விருப்பபடி நடப்பதும் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வதும் நல்லு றவை வளர்க்க உதவும். இன்று அதிக செலவுகள் காணப்படும். உங்களால் முடிந்த அளவு சேமிக்க வேண்டும்.

அதிக பதற்றம் காரணமாக முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியாக இருப்பதும் பிரார்த்தனை மேற்கொள்வதும் சிறந்த பலன் தரும்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ரூபா நோட்டுக்களை கையாள்வது குறித்து மத்திய வங்கி ஆலோசனை



நாட்டில் ஏற்பட்ட பேரிடரின் பின்னர், ஈரமான அல்லது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நாணயத்தாள்களை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து இலங்கை மத்திய வங்கி பொது ஆலோசனையை வெளியிட்டுள்ளது.

இதன்படி, ஈரமான நாணயத்தாள்களை பிரிக்கும்போது, பொதுமக்கள் அவற்றை மெதுவாகக் கையாளுமாறு அறிவுறுத்தப் படுகிறார்கள்.

ரூபா நோட்டுகள் பிரித்தெடுக்கப்பட்டவுடன், அவற்றை உறிஞ்சக்கூடிய பொருளால் சுற்றி அறை வெப்பநிலையில் உலர விடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ரூபா நோட்டுகளை உலர்த்தும்போது, வண்ணமயமான அல்லது அச்சிடப்பட்ட மேற்பரப்புகளைத் தவிர்த்து, சுத்தமான, உலர்ந்த மேற்பரப்பில் அவற்றைப் பரப்ப வேண்டும்.

சூடான நீர், சவர்க்காரம் அல்லது ரசாயனங்கள் பயன்படுத்தி ரூபா நோட்டுகளை உலர்த்தக்கூடாது, மாறாக காற்றோட்டமான இடத்தில் இயற்கையாகவே காற்றில் உலர்த்த வேண்டும்.

ரூபா நோட்டுகள் காய்ந்தவுடன், அவை பயன்படுத்த முடியாதவையாக இருந்தால், பொதுமக்கள் அவற்றை எந்த வணிக வங்கியிலும் மாற்றிக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.